1971 ஜூன் 23]

திருமதி த. ந. அனந்தநாயகி : ஆத்திகப் பிரசாரத்தில் பல பகுத்தறிவுக் கருத்துக்கள் இருக்கின்றன என்பதை இந்த அரசாங்கம் அறியுமா? அதிலே தலையிடுவதற்கு முன்னாலே தங்களுடைய பகுத்தறிவைப் பயன்படுத்தி யோசித்துத் தலையிடு வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தக் கேள்விக்கு முன்பே தாங்கள் அதைப் பயன்படுத்தி இருக்கலாம்.

திருமதி த. ந. அனந்தநாயகி : இது கேள்விக்குப் பதில் அல்ல ; கேள்வியைச் சமாளிக்கச் சொல்லக்கூடிய பதில்.

திரு. செ. கந்தப்பன் : தமிழ் உயர்தனிச் செம்மொழி என்று உலகமே பாராட்டுகின்ற நிலையில் இரண்டாயிரம் ஆண்டுக்கு முற்பட்டு பல மேதைகளால் உருவாக்கப்பட்ட தமிழ் நூல்களை, சங்க நூல்களை தமிழர்களே தெரியாதிருக்கும் நிலையில் வானொலி யில் அதற்கு முக்கியத்துவம் தரும் வகையில் நம்முடைய அரசு மத்திய அரசை வலியுறுத்துமா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்போது வானொலியில் இலக்கியங்கள், கவியரங்கங்கள், காவியங்கள் பற்றிய நய உரைகள் இவைகள் எல்லாம் நடைபெற்று வருகின்றன. அதை மேலும் விரிவாக்கும் வகையில் ஆக்கிடவேண்டுமென்ற பரிந்துரையை மாநில அரசு மத்திய அரசுக்குச் செய்யத் தவறாது.

Co-operative Coir Societies for Repatriates from Burma

• 30 Q.—THIRU N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Harijan Welfare be pleased to state whether there is any proposal to start Co-operative Coir Societies in the District Centres to rehabilitate the Burma repatriates?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இல்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : பர்மாவில் இருந்து வந்த தமிழ் மக்களுக்குச் சலுகைகள் செய்து தருவதற்காக மத்திய அரசு பணம் ஒதுக்கி இருக்கிறது. அம்மாதிரி ஒதுக்கப்பட்ட பணம் அந்த அகதிகளுக்குக் கொடுக்கப்படாமல் மீதியாகிவிட்டது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : அகதி களுக்காக ஒதுக்கப்பட்ட பணம் கொடுக்கப்படாமல் மிச்சமாகி இருப்பதாக அறியவில்லை. அவர்கள் பல வழிகளில் தொழில் செய்ய அரசாங்கம் உதவி செய்து வருகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு அவர்களுக்கு லோன் கொடுக்க ஒதுக்கப்பட்ட பணத்தை அரசாங்கம் கூறிய முறைப்படி அவர்கள் வாங்குவதற்குத் தயா ராக இல்லையென்ற காரணத்தால் ஒதுக்கப்பட்ட பணத்தில் பெரும் பகுதி செலவழிக்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தனிக் கேள்வி போட்டால் விவரம் கூற முடியும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட பணத்தில் பெரும்பகுதி செலவிடப்படவில்லை என்று அரசாங்கத்திற்கு அக்கவுண்டண்ட் ஜெனரலிடமிருந்து குறிப்புகள் வந்திருக்கின்றனவா ? அப்படிக் குறிப்புகள் வந்திருந்தால் அதன்மீது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டனவா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கேள்வி மாவட்ட வாரியாக பர்மா அகதிகளின் வாழ்க்கைக்காக கூட்டுறவு உற்பத்திச் சங்கங்களைத் தொடங்குவது பற்றியது. ஒதுக்கப்பட்ட பணம் செலவழிக்கப்பட்டதா, வேறு இடத்தில் இருந்து குறிப்புகள் வந்தனவா என்ற விவரங்கள் இல்லை. தனிக் கேள்வி போட்டால் அதற்கான விளக்கத்தைத் தரமுடியும்.

MR. SPEAKER : Question No. 31.

THIRUMATHI T. N. ANANDANAYAKI : Mr. Speaker, Sir, I have been raising my hand and trying to catch the eye of the Chair but I have not been given an opportunity to put a supplementary question. If no supplementary question is allowed on such an important question, how can we elicit any information from the Government? We are really sorry for not giving us a chance to put supplementary questions.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது சரியானதல்ல. அவர்களுக்கு இன்றைக்கு அதிகமாக துணைக் கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் குறுக்கே, குறுக்கே பேசிக்கொண்டிருக்கக் கூடாது. மிக அதிகமான துணைக் கேள்விகள் கேட்க அவர்களுக்கு வாய்ப் பளிக்கப்பட்டிருக்கிறது. வினா நேரம் முடிய இன்னும் பத்து நிமிடங்கள்தான் இருக்கிறது. நான்கு கேள்விகள் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு எத்தனைத் துணைக் கேள்விகள் அனுமதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை அவர்கள் பார்க்க வேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் ஒவ்வொருவருக்கும் துணைக் கேள்விகள் கேட்க வாய்ப்புக் கொடுப்பது என்றால் நான்கு மணி நேரம் இருந்தால்தான் முடியும். ஆகவே அவர்கள் அப்படிக் கேட்பது சரியானதல்ல என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நீராற்றின் குறுக்கே அணைக்கட்டு

***31 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் கீழ் " நீராறு ஆற்றில் " அணை கட்டும் வேலைகளை தமிழ்நாடு அரசு துவக்கியுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : ஆம். குறுக்கே அணைகட்டும் வேலை நடந்து வருகிறது. கேரள அரசின் இசைவுக்குப்பின் நீராற்றின் கீழ் பகுதியில் நீர்த்தேக்கம் கட்டும் வேலை மேற்கொள்ளப்படும்.